2.. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) **தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) மசோதா.**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) மசோதாவை அவை முன் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

3. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

(இ) தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) மசோதா.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) மசோதாவை இம் மாமன்றத்தின் திருமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இம் மசோதாவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மசோதா அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(உ) **தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, இனும் எஸ்டேட்டுகள் (எடுத்து விடுதல், ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த மசோதா.**

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, இனும் எஸ்டேட்டுகள் (எடுத்துவிடுதல், ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த மசோதாவை இம் மாமன்றத்தின் திருமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இம் மசோதாவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மசோதா அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(எ) **தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, கூட்டுறவு நில அடமான வங்கிகள் (திருத்த) மசோதா.**

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, கூட்டுறவு நில அடமான வங்கிகள் (திருத்த) மசோதாவை மன்றத்திற்கு அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.